**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF : Judicial Magistrate, Thuraiyur.
Case No. : CC.160 of 2022
Prosecution Witness : PW8

10.03.2025.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Calling | : உதவி ஆய்வாளர் |
| Father Name | : மருதப்பன் | | : |
| Village | : லால்குடி | Age | : 60 |
| Taluk | : லால்குடி | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கல்லக்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.04.2022 அன்று 11.00 மணிக்கு தா.பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொருப்பில் இருந்தபோது முசிறி அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வள்ளியம்மை என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலைய மனு எண் 80/2022 வழங்கி விசாரணைக்கு பின்பு காவல் நிலைய குற்ற எண் 47/2022 சட்டப்பிரிவுகள் 294(பி),323,506(1) இதச r/w 4 of TNPHW Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜ், பானுமதி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையுள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்ததன் பேரில் இவ்வழக்கின் எதிரிகளை தேடியபோது எதிரிகள் மாண்புமிகு திருச்சிராப்பள்ளி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில்

முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. அ.சா.1 க்கு கிசிச்சை அளித்த முசிறி அரசு மருத்துவமனையின் மருத்துவர் மாலினி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றேன். பின்பு அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி),323,506(1) இதச r/w 4 of TNPHW Act இருந்து 294(பி),324,506(1) இதச r/w 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா-ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி),323,506(1) இதச r/w 4 of TNPHW Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 யிடம் முசிறி அரசு மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் பெற்றேன். அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெறும்போது அவர் மயக்க நிலையில் இருந்தாரா என்றால் இல்லை. புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 நிதானம் இல்லாமல் இருந்ததால் கைரேகை வைத்ததாக அ.சா.1 கூறியிருந்தால் அது தவறு. அ.சா.2 ற்கு சம்பவத்தின்போது காயம் ஏற்பட்டதாக புகார் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். 2 மற்றும் 3 எதிரிகள் கெட்ட வார்த்தை பேசியதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது. அ.சா.2 ற்கு சம்பவத்தில் காயம் இல்லை. அதற்காக அவர் சிகிச்சை பெறவில்லை. சம்பவம் அ.சா.1 ன் வீட்டின் முன்பு நடைபெற்றது. பொது இடத்தில் நடைபெறவில்லை. அ.சா.1 ற்கும், எதிரிகளுக்கும் சொத்து சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது. சாட்சிகள் பிரியா, பிரபாகரன் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளின் கையொப்பம் இல்லை. அ.சா.1 மருத்துவரிடம் என்ன மாதிரியான கற்கலால் தாக்கியதாக கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ஐ எதிரிகள் தாக்கவில்லை என்றும்,

எதிரிகளால் அ.சா.1 ற்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 வயதானவர் என்பதால் வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2 வது எதிரியை அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆபாசமாக பேசியதாக 2 வது எதிரி புகார் கொடுத்து அவர்களை நான் விசாரணை செய்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றும், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,

நீதித்துறை நடுவர், துறையூர்